**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை – 2016**

---

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, தேறிய சொத்துக்கள் மாற்றக் கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 50 ஆம் இலக்க மீயுயர் நீதிமன்றத் தொகுதி முகாமைத்துவச் சபை அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரமானதோர் விரிவான அறிக்கை சபையின் மார்ஷல் அவர்களிற்கு 2017 நவம்பர் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களை (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) பின்தொடர்ந்து இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீன அரசாங்கத்தின் உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட்டிருந்த மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் பேணுகை செயற்திட்டத்தினால் கட்டிட புதுப்பித்தலிற்காக செலவிடப்பட்டிருந்த ஏறத்தாழ யுவான் 22,180,000 இற்குச் சமமான ரூபா 510 மில்லியன் தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,000,000 திறைசேரி வைப்பு நீண்டகாலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டமையால் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் 2016 திசெம்பர் மாதத்தில் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. அச் சொத்தினை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைகள் அதிகாரச்சட்டம் | 2006 சனவரி முதல் 2013 யூலை வரையான காலத்திற்காக ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் பணிக்கொடை ஆகியவற்றைக் கணிப்பிடுகையில் வாழ்க்கைச் செலவுப் படியினைக் கருத்திற் கொள்ளாமையால் செலுத்தவேண்டியிருந்த உதவு தொகைக்காக ரூபா 5,730,313 மிகை அறவீட்டை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவையின் நிதிப்பிரமாணம் 625(1)(அ) | சீன அரசாங்கத்தின் உதவியின் மூலம் அமுல்படுத்தப்பட்ட மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் பேணுகை செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் ரூபா 7,970,000 சுங்கக் கட்டணம் செலுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்த பொருட்கள் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய MOFP/ERD/2007/2 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்களும் முறைப்படியாக சான்றுறுதிப்படுத்திய வருடாந்த கணக்குகளை தொடர்ந்துவரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் யுவான் 22,180,000 செலவிடப்பட்டிருந்த மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் பேணுகை செயற்திட்டத்தின் கணக்குகள் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 24,252,697 என்பதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் உள்ளடங்கியிருந்த நீதி அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 15,328,661 தொகை நிச்சயமாக கிடைக்காதென உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், நீதித் துறைக்குரிய சிறுவர் நீதிமன்றம், தொழில் நியாயச் சபை, சமூக அடிப்படையிலமைந்த சீர்திருத்தச் செயற்திட்டம், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, குற்றம் இழைத்தோரை பாதுகாக்கும் தேசிய நிலையம் மற்றும் மோட்டார் போக்குவரத்து நீதிமன்றம் போன்ற 06 நிறுவனங்களிற்கு சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த 06 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கட்டிட வாடகை வருமானம் ரூபா 8,639,000 ஆகக் காணப்பட்டது. முறையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருக்காமை மற்றும் அந்தந்த ஆண்டுகளில் வாடகை வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை காரணமாக 01 ஆண்டு முதல் 06 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாக அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 478,308 ஆகக் காணப்பட்டதுடன் அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள ரூபா 45,854 தொகையான 09 கடன்கொடுத்தோர் மீதிகளும் காணப்பட்டன.

(இ) 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தீர்க்கப்படாதிருந்த ரூபா 354,870 தொகையான 26 மீதிகள் முன் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் பல்வேறு வருமானக் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்வதற்கு முன்னர் தொடர்புடைய கடன்கொடுத்தோர்களிடம் கேட்டறிந்தமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,667,347 மிகையொன்றானதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 32,184,705 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 14,517,358 பின்னடைவொன்றை காண முடிந்தது. அரசாங்க மானியம் ரூபா 3,600,917 ஆல் அதிகரித்தும் திருத்துதல் மற்றும் பேணுதல் செலவினம் ரூபா 1,315,906 ஆல் குறைவடைந்துமிருந்த போதிலும், ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 5,955,668 ஆல் குறைந்தும் மின்சாரச் செலவினம் ரூபா 13,587,095 ஆல் அதிகரித்தும் காணப்பட்டமையே மேற்படி பின்னடைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டின் ரூபா 11,497,626 தொகையான பற்றாக்குறை ஏற்றத்தாழ்வுகளுடன் மீளாய்வாண்டில் ரூபா 17,667,347 மிகையொன்றாக அதிகரித்திருந்தது. நிதி விளைவிற்கு ஊழியர் வேதனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிகள் என்பவற்றைக் கருத்திலெடுத்த பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 36,278,273 ஆகக் காணப்பட்ட பங்களிப்பு மீளாய்வாண்டில் ரூபா 93,518,973 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1987 இன் 50 ஆம் இலக்க மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியினையும் அதிலுள்ள கட்டிடங்களையும் பராமரித்தல், நிர்வகித்தல், முகாமைத்துவம் செய்து பேணுதல், தொகுதியிலும் அங்குள்ள கட்டிடங்களிலும் காணப்படுகின்ற வசதிகளை முன்னேற்றுவதற்குத் தேவையானவாறு புதிய பகுதிகளை சேர்த்துக்கொள்ளல், மாற்றியமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் சபையின் குறிக்கோள்களாக உள்ளன. இந்தக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய மூலதனச் சொத்துக்களை புனரமைத்து முன்னேற்றும் 16 செயற்திட்டங்களிற்காக ரூபா 9,781,000 தொகையும் மீளாய்வாண்டில் கையேற்பதற்கான இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள், 9 மின்சார மற்றும் மனைப் பொருட்களிற்காக ரூபா 2,224,000 தொகையுமாக மொத்தம் ரூபா 12,005,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த பணிகள் செய்யப்படாமை காரணமாக அந்த நிதி ஏற்பாடுகள் முழுவதும் சேமிப்பாகியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட வேண்டிய மூலதனச் சொத்துக்களை புனரமைத்து முன்னேற்றும் 03 செயற்திட்டங்களிற்காக ரூபா 3,622,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிப்பு ரூபா 2,825,000 அல்லது 18 சதவீதத்திற்கும் 64 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக காணப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டில் கையேற்கப்பட வேண்டிய 04 நிலையான சொத்துக்களிற்காக ரூபா 2,160,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிப்பு ரூபா 1,853,000 அல்லது 12 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக காணப்பட்டது. உரிய காலத்தில் சிரேஷ்ட கேள்விச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காமை காரணமாக ஏற்பட்டிருந்த தாமதத்தினால் குறித்த செயற்திட்டங்களை அமுலாக்குவதில் தாமதங்கள், சேமிப்பின் சதவீதம் உயர்வடைந்திருந்தமைக்கு காரணம் என நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரிய பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான 16 செலவின விடயங்களிடையே 30 சதவீதம் முதல் 384 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயனப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் மார்ஷல் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சீராக்கத்திற்கான நாட்குறிப்புப் பதிவுகளில் பேரேட்டுக் கணக்குகளின் இலக்கங்களும் விளம்பல்களும் குறிப்பிடப்படாதிருந்ததுடன், நாட்குறிப்புப் பதிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | எழுத்துருவிலான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாது சபையின் சில கட்டிடங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை, கைச்சாத்திட்டிருந்த வாடகை உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை, வாடகை கட்டிடங்களிலிருந்து வெளியேறியிருந்த நிறுவனங்களிற்கும் வாடகை பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை, நிலுவை வாடகைகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |